# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.118/2022**
**PW1**

| | | |
|---|---|---|
| Name | : | தர்மா |
| Father's/Husband's Name | : | சங்கர் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.06.2025.
A1,2, 4 to 7 present.

**முதல் விசாரணை**

நான் வீராணந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் . அவர்கள் எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 17.09.2021 அன்று நான் ஒரு பாட்டுக்கச்சேரிக்கு சென்று விட்டு என் சொந்த ஊருக்கு வெங்கடேசனுடன் இருசக்கர வாகனத்தில் திரும்பி வந்தேன். அப்போது புதுப்பாளையம் நெல் குடோன் அருகே வரும்போது கமிட்டி பக்கத்தில் இருந்து சத்தம் கேட்டது . நான் பயந்து அங்கிருந்து சென்றுவிட்டேன் . மாரியம்மன் கோவில் அருகே புதுப்பாளையம் போலிசார் இருந்தார்கள் . அவர்களை கமிட்டி அருகே அழைத்து வந்தேன். அங்கு வெங்கடேசன் உயிர்போற நிலையில் இருந்தார். அவருக்கு கை, கால்களில் அடிபட்டு கிடந்தார் . ஆம்புலன்ஸ் வரவழைத்து நானும் , முருகன், காத்தவராயன் ஆகியோர் திருவண்ணாமலை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் . போகும்போதே அவர் இறந்துவிட்டார் . இது சம்மந்தமாக முருகன் என்பவர் புதுப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . போலிஸ் என்னை விசாரித்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி , அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2021 ஆம் தேதி இரவு 9.30 மணியளவில் இறந்துபோன வெங்கடேசன் என்பவருடன் நான் உட்கார்ந்து கொண்டு ஜீ .என் பாளையத்தில் இருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது, புதுப்பாளையம் மெயின் ரோடு TNCC குடோன் அருகே கல்லாற்று ஓடை தரைப்பாளத்திடம் நாங்கள் வந்துகொண்டிருந்தபோது அங்கு வழியில் TN25BM4194 என்ற Bolero pickup van நின்று கொண்டிருந்ததாகவும் , அதற்கு பக்கத்தில் மதி , சுரேஷ் நின்று கொண்டிருந்ததாகவும், அதற்கு பக்கத்தில் இருசக்கரவாகத்தில் அங்கு வந்த வினோத், ஏழுமலை ஆகீயோர் எங்களை மறித்து நின்றுகொண்டிருந்ததாகவும் , அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த வசந்தும் , வல்லரசும் எங்களை சுற்றி வளைத்தவுடன் நான் மட்டும் தப்பி ஓடி , செடியில் மறைந்திருந்து பார்த்தபோது எனக்கு பின்னால் வந்த வெங்கடேசன் கால் தடுமாறி கீழே விழுந்தவுடன் எதிரிகள் மதி, வினோத், சுரேஷ் வீச்சறுவாளை கொண்டு வெங்கடேசனை பார்த்து ஆபாசமாக பேசி மதி என்பவர் அன்னிக்கு என் கையை வெட்டுன அதனால எனக்கு கை இல்லை உன்னை இன்னைக்கு வெட்டி சாய்த்தால்தான் என் ஆத்திரம் அடங்கும் என சொல்லிக்கொண்டு முன்பக்க தலை, வலது பக்க கழுத்து, வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த வசந்த்அறிவாளால் வலது தோள்பட்டை, இடது தோள்பட்டை , இடது முழங்கை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும், சுரேஷ் வீச்சறுவாளால் வெங்கடேசனின் இடது கால் , வலது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த ஏழுமலை , வினோத், வல்லரசு வெங்கடேசனை விட்டுவிடாமல் வழிமறித்தும் , இருந்தபோது அதை நான் நேரில் பார்த்து என் பெரியப்பா முருகன் என்பவருக்கு தகவல் சொன்னேன்என்றும் , உடனே அங்கு வந்த பெரியப்பா , வெங்கடேசன் மனைவி ரத்னா ஆகியோர்கள் வெட்டுகாயத்துடன் இருந்த வெங்கடேசனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவனைக்கு கொண்டு சேர்த்ததாகவும் , அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாகவும் மருத்துவர் கூறினார் என்றும் , இது சம்மந்தமாக என் பெரியப்பா புதுப்பாளையம் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும், அதன்பேரில் வழக்கு பதிவு செய்து போலிசார் என்னை

விசாரித்தார்கள் என்றும் , போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்த வெங்கடேசனின் தந்தை முருகன்தான் புகார் கொடுத்தார் . அவர் தற்போது உயிருடன் இல்லை. போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.